Aaruthal

# எதிர்வரும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான

## விசேட இடர்கால செயற்றிட்டம் - 2021

## மாதிரி வினாத்தாள் – II

**தரம் - 11** | **தமிழ்மொழியும் இலக்கியமும்** | **நேரம் :- 3 மணி 10 நிமிடம்**

பகுதி - I

❖ எல்லா வினாக்களிற்கும் விடை எழுதுக.

➢ **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01) **குன்று** அனைய திருநெடுந்தோள் - இங்கு குன்று என்பது
(1) அழகு (2) மலை (3) வலிமை (4) சிலை

02) **நந்து** ஊரும் புனல் நாடு - இங்கு நந்து என்பது
(1) முத்து (2) நத்தை (3) சங்கு (4) பாம்பு

03) "பொய்மை சேர் மதியினிற் புலை **நாத்திகம்** கூறுவர்" இங்கு நாத்திகம் என்பதன் எதிர்ச்சொல்
(1) சாத்திரம் (2) வேதம் (3) மந்திரம் (4) ஆத்திகம்

04) பனிக்கூட்டம் விரட்டிவரும் பண்புமிகு **ஈரம்**. ஈரம் என்பதன் எதிர்க்கருத்து
(1) வெப்பம் (2) வரட்சி (3) காய்தல் (4) சூடு

05) இலட்சியவாதிகள் தமக்கோர் **இன்னல்** வந்த போது - இன்னல் என்பதன் எதிர்க்கருத்து
(1) துன்பம் (2) இடுக்கண் (3) கவலை (4) இன்பம்

➢ **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06) (Gas) காஸ் விலை அதிகரிக்கப்பட்டது. Gas என்பதன் தமிழ் வடிவம்
(1) படிமம் (2) வடிவம் (3) வளிமம் (4) நீர்மம்

07) உறுப்பு, பூவரும்பு, முட்டை எனும் பலபொருள் தரும் ஒரு சொல்
(1) ஐயம் (2) பொறை (3) கரு (4) சினை

08) தெலுங்கு மொழிச் சொல்லாக அமையாதது
(1) சொத்து (2) இலஞ்சம் (3) சந்தடி (4) இடாப்பு

09) பெண் யானை பிடி எனப்படுவது போல பெண் குதிரை
(1) பிணா (2) பிணை (3) பெடை (4) வடவை

10) ஓலை என்னும் மரபுப் பெயருக்கு பொருந்தாதது
(1) தென்னை (2) கரும்பு (3) கமுகு (4) தாளை

11) உலக நடையறிந்து ஒழுகுதல்
(1) ஓலக்கம் (2) ஓம்படை (3) ஒப்புரவு (4) மாராயம்

12) இக்கரை மாட்டிற்கு அக்கரைப் பச்சை. அக்கரைப் பச்சை எனும் மரபுத் தொடரின் பொருள்

(1) தூரத்துப் பச்சை (2) பொய்த் தோற்றம்

(3) வெளித் தோற்றம் (4) எதிர்த் திசை

13) அறிஞர் அவை போல தாரகை

(1) கூட்டம் (2) தொடர் (3) கணம் (4) குழாம்

14) 80 (எண்பது) ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா

(1) வெள்ளி விழா (2) பொன் விழா (3) பவள விழா (4) அமுத விழா

15) ஓடும் புளியம்பழமும் போல என்ற உவமைத் தொடருக்கு நிகரான பிறிதொரு உவமைத் தொடர்

(1) உள்ளங்கை நெல்லிக்கனிபோல

(2) காட்டில் எறிந்த நிலாப் போல

(3) தாமரை இலைத் தண்ணீர் போல

(4) அணை கடந்த வெள்ளம் போல

16) அவள் சித்திரப் பதுமை போல ஆடாமல் அசையாமல் இருந்தாள். இங்கு உவமானம்

(1) சித்திரம் (2) பதுமை (3) சித்திரப் பதுமை (4) அவள்

17) திடீரென மயங்கி விழுந்தான். இங்கு திடிரென என்பது

(1) இடைச்சொல் (2) வினைச்சொல்

(3) பெயரடை (4) ஒலிக்குறிப்புச் சொல்

18) புகைச் சுருளாய் நெளிந்து நெளிந்து வந்தா. இங்கு நெளிந்து நெளிந்து என்பது

(1) அடுக்குத் தொடர் (2) அடுக்கிடுக்குத் தொடர்

(3) இணைமொழி (4) இரட்டைக் கிழவி

19) மிகக் கவனமாக என்ற கருத்தை உணர்த்தும் அருஞ்சொற்றொடர் எது?

(1) அருமை பெருமையாக (2) ஊணுறக்கமின்றி

(3) கண்ணுக்குக் கண்ணாக (4) வழிமேல் விழி வைத்து

20) ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும். இங்கு உறு என்பது

(1) பெயர்ச்சொல் (2) இடைச்சொல் (3) உரிச்சொல் (4) வடசொல்

➢ **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21) பின்வருவனவற்றுள் பகுபதம்

(1) ஆடு (2) நில் (3) பாடல் (4) அறிவு

22) பின்வருவனவற்றுள் இயல்புப் புணர்ச்சி

(1) கல்லால் (2) தேனருவி (3) புற்றரை (4) சொன்னயம்

23) உயர்வான சிந்தனை என்பதில் இடம்பெற்ற அடைமொழி

(1) தனிப் பெயரடை (2) வினையடை

(3) தனிவினையடை (4) ஆக்கப் பெயரடை

24) நடக்கலன் இதில் வரும் அல் என்னும் இடைநிலை

(1) உடன்பாடு (2) பெயரெச்சம் (3) எதிர்மறை (4) வினையெச்சம்

25) சபையில் இருந்தோரை நாவலர் நோக்கினார். இருந்தோரை என்பது

(1) தொழிற்பெயர் (2) வினையாலணையும் பெயர்

(3) தெரிநிலை வினைமுற்று (4) குறிப்பு வினைமுற்று

26) உடன்நிலை மெய்ம்மயக்கம் இடம்பெற்ற சொல்

(1) மஞ்சள் (2) பஞ்சு (3) நன்றி (4) அன்னம்

27) கொரோனா வைரஸ் பரவியது. பாடசாலைகள் மூடப்பட்டன. மேற்படி இரு வாக்கியங்களையும் இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்

(1) ஆயினும் (2) எனவே (3) என்றாலும் (4) இருப்பினும்

28) அகரதி ஒழுங்கில் அமைந்த சொற்றொகுதி

(1) சட்டம், சோறு, சினம், சொண்டு (2) ஆடு, மேடு, காடு, தோடு

(3) சாக்கு, சீற்றம், சேறு, சோலை (4) சிற்பம், குரவை, பட்டம், பரி

29) பனிக்குளிர் என்பது எவ்வகைத் தொகை

(1) வேற்றுமைத் தொகை (2) வினைத் தொகை

(3) உவமைத் தொகை (4) பண்புத் தொகை

30) நாராய் நாராய் செய்கால் நாராய். இங்கு நாராய் என்பது உணர்த்தும் வேற்றுமைப் பொருள்

(1) எழுவாய் (2) உடைமை (3) விளி (4) இடம்

➢ **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31) சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையே அபிவிருத்திக்கான .............................. கைச்சாத்திடப் பட்டது

(1) உத்தரவாதம் (2) ஒத்துழைப்பு (3) பிரகடனம் (4) ஒப்பந்தம்

32) அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த ஜனாதிபதி ஆணைக்குழு ........................................ செய்தது.

(1) ஆய்வுரை (2) பரிந்துரை (3) மதிப்புரை (4) விதப்புரை

33) காதலியை காரிருளில் கானகத்தே கைவிட்ட என ........................................... அமைந்த சொற்களைக் கவிஞன் கையாண்டான்.

(1) எதுகை (2) மோனை (3) சிலேடை (4) உவமை

34) அவனுக்குக் கிடைக்கவில்லை ..................................... முயற்சியைக் கைவிடவில்லை.

(1) எனவே (2) ஆவது (3) அல்லது (4) ஆயினும்

➢ **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியை தெரிவு செய்க.**

35) மருத்துவர்கள் பலர் தடுப்பூசி ஏற்றும் நிகழ்விற்கு

(1) வந்தார்.. (2) வந்திருந்தார்கள். (3) வருவார். (4) வரார்.

36) தற்காலத்தில் நிகழ்நிலை கற்றலில் பங்கு கொள்ளும் மாணவர் தொகை ............................

(1) அதிகம். (2) அதிகமானோர்.

(3) அதிகரித்தள்ளது. (3) அதிகரித்தனர்.

➢ **கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

**குஞ்சைக் காக்கும் கோழி போலக் குடியைக் காத்த மன்னர்கள்**
**கோல் நடத்த அச்சமின்றி மேல் நினைப்புக் கொண்டு நாம்**
**பஞ்சபூத தத்துவங்கள் பக்தியோடு முத்தியைப்**
**பார் சிறக்கச் சொன்ன நாமும் சீர் குறைந்து போவதோ!**

37) மன்னர்கள் எதனைக் காக்கின்றனர்?

(1) குஞ்சு (2) மக்கள் (3) பஞ்சபூதம் (4) கோழி

38) கோல் நடத்த என்ற தொடரில் 'கோல்' என்ற சொல்லால் உணர்த்தப்படுவது

(1) மன்னன் (2) மக்கள் (3) அரசாட்சி (4) நாடு

39) இங்கு கையாளப்பட்ட உவமையணியின் உவமான உவமேயங்களுக்கிடையிலான பொதுத் தன்மை யாது?

(1) காத்தல் (2) ஆட்சி (3) பயம் (4) சிறப்பு

40) கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ) ஆனால் மொழியின் பன்பைப் பற்றிய ஆராய்ச்சியை நாம் செய்ய வேண்டும்.

ஆ) இலக்கியமென்பது ஒரு கலை

இ) அதை அடிப்படையாகக் கொண்டு இலக்கிய விமரிசனம் தோன்றும்.

ஈ) அதன் கருவியான மொழியைப் பற்றிய நுட்பமான ஆராய்ச்சி நம்மிடமுள்ளது.

உ) இதை தத்துவ ரீதியான இலக்கிய விமர்சனம் என்று சொல்லலாம்.

(1) ஆ, ஈ, அ, இ, உ (2) ஆ, இ, ஈ, உ, இ

(3) ஆ, உ, அ, இ, ஈ (4) ஆ, அ, ஈ, உ, இ

($40 \times 1 = 40$ புள்ளிகள்)

## பகுதி - II

**01) சுருக்கமான விடை தருக.**

(1) பின்வரும் சொற்றொடரை சந்திபிரித்து எழுதுக.
நானீங்கு புகலுமொழி நற்கிளியே கூறாயே

(2) திருக்குறளில் உள்ள ஒவ்வொரு குறள்களும் அறிவூட்டுவனவாய் இருந்தன. இவ்வாக்கியத்தை வழுநீக்கி எழுதுக.

(3) பின்வரும் வாக்கியத்தை நியமத் தமிழில் எழுதுக.
“மனெ நீ வெயிலுக்க வராம தங்கச்சிய பார்த்துக்க”

(4) பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ‘நாவலர் எழுந்தார்’ என்னும் கட்டுரையை எழுதினார். இதனைச் செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

(5) துன்புறுவோரின் காற்தூசியையும் கழுவிவிடும் அன்பின் ஊற்று -
இவ்வாக்கியத்தின் எழுவாய் பயனிலையை கண்டறிக.

(6) ‘முடி’ என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாக தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

(7) பின்வரும் வாக்கியங்களில் அறிவித்தலாக அமைந்த வாக்கியம், அறிவுறுத்தலாக அமைந்த வாக்கியம் என்பவற்றை இனங்கண்டு எழுதுக.
அ) பயணத்தடை எதிர்வரும் நவம்பர் மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளது.
ஆ) பயணத்தடையின் போது விதியில் பயணிப்போர் அரச அனுமதி அட்டடைகளை வைத்திருத்தல் அவசியமாகும்.

(8) ‘கைம்மாறு’ என்ற மரபுத் தொடரின் பொருள் யாது?

(9) பானையில் புழுங்கல் அவிந்தது. இதில் காணப்பெறும் ஆகுபெயரை இனங்கண்டு அது எவ்வகை ஆகுபெயர் எனவும் குறிப்பிடுக.

(10) மாலதி வகுப்பறையில் மாணவர்கள் மத்தியில் எதுவும் பேசாது நின்றாள். இவ்வாக்கியத்தின் எதிர்மறை வினையெச்சம் யாது?

($10 \times 2 = 20$ புள்ளிகள்)

**02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

(1) உலகை உலுக்கிவரும் கொரோனா நோய்த் தாக்கத்தின் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் மாணவர்களின் கல்வியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனினும் மாணவர்கள் சுயகற்றலில் ஈடுவதன் மூலம் தமது கல்வியறிவைப் பெற்றுக் கொள்ள முடியும். கொரோனா இடர் காலத்தில் மாணவர்கள் எதிர்நோக்குகின்ற சவால்களையும் அவற்றுக்கான தீர்வுகளையும் முன்வைத்து விளக்கக் கட்டுரை ஒன்று எழுதுக.

(2) "குடி குடியைக் கெடுக்கும்" "புகைத்தல் உடல் நலத்திற்குக் கேடு" "போதையற்ற உலகை உருவாக்குவோம்" போன்ற பல்வேறு வாசகங்களை அன்றாடம் நாம் கண்ணுற்ற போதிலும் போதைவஸ்துப் பாவனையில் இருந்து மானிட சமுதாயத்தை மிட்பது அரியதொரு நிகழ்வாகவே இருக்கின்றது. அந்தவகையில் உயிர் கொல்லியான போதைவஸ்துப் பாவனையை இனிவரும் இளைஞர் சமுதாயத்திலாவது குறைக்க வேண்டும் என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு போதைவஸ்து ஒழிப்பு தினத்தில் நீர் நிகழ்த்தும் மேடைப்பேச்சு.

(3) இன்று இலத்திரனியல் ஊடகங்களூடாகவும் அறிவுப் பரப்புகை நிகழ்கிறது. குறிப்பாக இணையம், தொலைக்காட்சி ஆகியவற்றின் மூலம் இது பெரும்பாலும் நடைபெறுகிறது. இதனால் பாரம்பரியமான வாசிப்புப் பழக்கமும் அதனால் பெற்றுக் கொள்ளத்தக்க அறிவும் நம்மிடையே அருகி வருகின்றன. இணையம் முதலானவற்றினூடாகப் பெறப்படும் அறிவே சிறந்தது என வாதிடும் ஒருவருக்கும் நூல்வழி வாசிப்பினூடாகப் பெறப்படும் அறிவே சிறந்தது என வாதிடும் இன்னொருவருக்கும் இடையிலான உரையாடல்

(4) சிறுவயதிலேயே தந்தையை இழந்த கமலன் தாயுடன் கூடவே பெண் சகோதரஉடன்பிறப்புக்களால் குடும்பத்தின் சுமைதாங்கி ஆகின்றான். இதனால் உறவுகளால் ஒதுக்கிவிடப்பட்ட போதும் சிறந்த நட்பினாலும் ஆசிரிய வழிகாட்டலாலும் கல்வியில் உயர்ந்து உலகம் பேசும் நிலையாகின்றான் என்பதைக் கருவாகக் கொண்டு ஒரு சிறுகதை எழுதுக. அதற்குப் பொருத்தமான தலைப்பிடுக.

(25 புள்ளிகள்)

**03) பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.**

'ஆங்கிலம் பயிலலே கல்விக்கழகு' என்பர் சிலர் அவர்களே கற்றவர்கள் என்றும் சிலர் கூறுவர் ஆங்கிலம் கூடாதென்று கூறேன். உலக அளவில் பரவும் அம்மொழியை இளைஞர் படிக்க வேண்டும் என்பேன். ஆயின் ஆங்கிலத்திலேயே கல்வி அறிவுண்டு. அதுவே வாழ்விற்கு வழிகாட்டுவது என்பன போன்றவை ஏற்க

இயலாதவை. ஆங்கிலம் ஒரு நாட்டு மொழியே. ஆங்கிலம் கற்பதே அறிவுக்கு வழியென்பது அறியாமை. அறிவை எம்மொழி வாயிலாகவும் பெறலாம். கல்விக்கு இந்த மொழி தான் துணை என்று கூறவியலாது ஜேர்மனி, பிரான்ஸ் முதலிய நாட்டவர் ஆங்கிலம் கற்றா அறிவை வளர்த்தனர்? அவர் தம் தாய் மொழி மூலமே அறிவு வளர்ச்சி பெற்றனர். வான்புகழ் வள்ளுவர், இளங்காவடிகள் சேக்கிழார், கம்பர் போன்றோர் ஆங்கிலம் கற்றா அகிலம் போற்றும் காவியங்கள் கண்டனர். ஆதலின் ஒரு நாட்டு மொழியே கல்விக்குரியது என்பது இயற்கையுமன்று எற்கத் தக்கதுமன்று என உணர்ந்து தாய் மொழியிலேயே கற்கலாம் எனத் திரு. வி. கல்யாண சுந்தரனார் கூறுகிறார்.

(10 புள்ளிகள்)

**04) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

எவ்வித தாழ்வுச் சிக்கல்களும் இல்லாமல் வெட்கம், பயம் அனைத்தையும் மறந்து அனைவருடனும் சுமூகமாக உரையாடும் பண்புகளை சமூகமயமாதல் எனலாம். இவ்வாறான சமூகமயமாதலுக்கு முக்கிய பங்காற்றுவது பாடசாலையே. முதலில் மாணவன் வகுப்பறையில் பயத்துடன் காணப்படுகின்றான்.

நாட்கள் செல்லச் செல்ல அவனுக்கு துணிவு பிறக்கிறது. தனது திறமையை காட்ட முற்படுகின்றான். குழுச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றான். இது சமூகமயமாதலின் முதற்படி எனலாம். தொடர்ந்து உயர்வகுப்பு சகோதரர் பல்வேறு மன்றங்களில் கலந்து கொண்டும் வாய்ப்பு வளர்த்துக் கொள்வதுடன் தனது கூச்சத் தன்மையை ஒழித்து விடுகிறான்.

இதுமட்டுமல்ல இணைபாடவிதான செயற்பாட்டில் மொழித்திறன் போட்டிகள், கணித, விஞ்ஞான போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன. இதன் மூலம் மாணவர்களுக்கு விட்டுக் கொடுப்பு, புரிந்துணர்வு, ஒற்றுமை, பொறுமை போன்ற பண்புகளை வளர்த்துக் கொள்வதன் மூலம் சமூகமயமாவதற்கான வழி ஏற்படுகிறது.

(1) சமூகமயமாதல் என்றால் என்ன?

(2) சமூகமயமாதலுக்கு பங்காற்றும் நிறுவனம் யாது?

(3) சமூகமயமாதலின் முதற்படி யாது?

(4) இணைப்படாவிதமான செயற்பாடுகளாக கூறப்படுபவை எவை?

(5) இணைப்பாடவிதமான செயற்பாடுகள் மூலம் எத்தகைய பண்புகளை வளர்த்துக் கொள்ள முடியும்?

($5 \times 2 = 10$ புள்ளிகள்)

05) இலங்கை விவசாய நாடாக இருந்த போதிலும் இன்றைய இளைஞர்கள் விவசாயத் துறையில் நாட்டம் செலுத்துவது குறைவடைந்து காணப்படுகிறது. அதேவேளை இரசாயன உரங்களின் பாவனை அதிகரித்துள்ளதால் மக்கள் பல்வேறு நோய்த் தாக்கத்திற்கும் உள்ளாகி உள்ளனர். இந்நிலையைத் தடுத்து எதிர்காலத்தில் சேதனப் பசளையின் பயன்பாட்டை அதிகரித்து இளைஞர்கள் விவசாயத்துறையில் ஆர்வத்துடன் ஈடுபட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பத்திரிகை நிறுவனமொன்றுக்கு 100 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

**அல்லது**

நாம் வாழும் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்காவிடின் ஏற்படும் பாதகமான விளைவுகள் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசுடன் இணைந்து நாமும் பிற சமூக அமைப்புக்களும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு 100 சொற்களில் ஒரு துண்டுப் பிரசுரம் எழுதுக.

(15 புள்ளிகள்)

எதிர்வரும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப்
பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான

# விசேட இடர்கால செயற்றிட்டம் - 2021

## மாதிரி வினாத்தாள் – II

| தரம் - 11 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி - III

- **அறிவுறுத்தல்களுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- **1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.**
- **இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.**

**01) சுருக்கமான விடை தருக.**

(1) "தெள்ளியவாலின் சிறுபழத்தொரு விதை
தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும் நுண்ணிதே"

அ) தெள்ளிய வாலின் எனும் தொடரின் பொருள் யாது?

ஆ) மேற்படி பாடல் வரி இடம்பெறும் இலக்கியம் யாது?

(2) 486 கம்பியூட்டர் என்று உச்சாடனம் செய்தவாறே அதன் வீரப்பிரதாபங்களைப் பற்றி ஒரு பரணி பாடினார்.

அ) பரணி என்பதால் கருதப்படுவது யாது?

ஆ) உச்சாடனம் என்பது உணர்த்தும் கருத்து யாது?

(3) "கொற்றத்தார்க் குரிசில் இவர் ஆர்? என்று குகன் வினவ, கோக்கள் வைகும் முற்றத்தான் முதல் தேவி"

அ) கொற்றத்தார்க் குரிசில் என்பதன் கருத்து யாது?

ஆ) முற்றத்தான் முதல் தேவி எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

(4) "நற்றேர்ப் பொய்கை யூரன் கேண்மை"

அ) இப்பாடலின் திணை, துறை என்பவற்றினைக் குறிப்பிடுக.

ஆ) தலைவனின் நாட்டுவளம் எவ்வாறு புலப்படுத்தப்பட்டுள்ளது?

(5) இவ்விரு பெருமாதரின் இலட்சியங்களை நாம் கண்டறிதல் கூடுமானால் இலக்கிய இன்பம் தித்திக்கும்.

அ) இரு பெருமாதர்களும் யாவர்?

ஆ) பெருமாதர்களும் பாத்திரங்களாக விளங்கும் காப்பியம் எது?

(6) 'மழ வெய்யில நனயாம அவவ கொண்டு போகணும்"

அ) இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

ஆ) இக்கூற்று இடம்பெறும் இலக்கியம் எது?

(7) கண்ணை மறைத் தேகொடு போய்க்
காட்டில் விடும் பூஞையைப் போற்
பெண்ணை மனையடைத்து பின்னொருவர் கைகொடுப்பர்
அ) இப்பாடல் இடம்பெற்ற இலக்கியம் எது?
ஆ) பூஞை என்பதன் பொருள் யாது?

(8) "காட்சிப் படிமங்கள் மூலம் சொல்லக்கூடிய ஒன்றை வார்த்தை மூலம் கூற முயன்றால் அங்கே சினிமா சீரழிகிறது"
அ) இக்கூற்றைக் கூறியவர் யார்?
ஆ) காட்சிப் படிமங்களை இணைப்பதற்கான முறைகள் யாவை?

(9) "அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்
எந்தையுமுடையேம் எம்குன்றும் பிறர் கொளார்"
அ) இப்பாடலில் திணை, துறை என்பவற்றைக் குறிப்பிடுக.
ஆ) திங்கள் என்பதன் பொருள் யாது?

(10) "பதியிழந்தனம் பாலனை யிழந்தனம்"
அ) இப்பாடல் இடம்பெறும் இலக்கியம் எது?
ஆ) பதி, பாலன் எனப்பட்டோர் யாவர்?

($10 \times 2 = 20$ புள்ளிகள்)

**02) பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

(1) நீ தூது நடந்தருளி எமது நினைவு அவர்க்கு உரைத்தால்
நினைவின் வண்ணம்
தாது ஊதி அளி முரலும் தண்பதியும்
தாயமும் தான் தாரான் ஆகில்
மீது ஊதுவளைக் குலமும் வலம் புரியும்
மிக முழங்க வெய்ய காலன்
மாதூதர் மனம் களிக்கப் பொருது எனினும்
பெறுவன் இது வசையும் அன்றே.
அ) இப்பாடலில் தருமன் கூறும் பழியற்ற செயல் யாது?
ஆ) இப்பாடலில் கூறப்படும் நாட்டு வளச் சிறப்பு யாது?

(2) என்றலுமே அடியின் மிசை நெடிது வீழ்ந்து
அழுவானை இவன் யார்? என்று
கன்று பிரி காராவின் துயர் உடைய
கொடி வினவ கழல்கால் மைந்தன்
இன் துணைவன் இராகவனுக்கும் இலக்குவற்கும்
இளையவர்க்கும் எனக்கும் மூத்தான்
குன்றனைய திரு நெடுந் தோள் குகன்
என்பான் இந்நின்ற குரிசில் என்றான்

அ) குகனை பரதன் கோசலைக்கு எவ்வாறு அறிமுகம் செய்கிறான்?

ஆ) இப்பாடலில் இடம்பெறும் அணியினை விளக்குக.

(3) தம்பெருமை தாமறியாத் தஞ்சமிலாப் பெண்கடமை வெம்புலிவாய்
மானென்ன வீணே கொடுத்திடுவார் செம்பொற்றிரளுடனே வெந்துயரம்
சேர்வதிலுஞ் செம்பொனிலாவின்பஞ் சிறந்ததெனக் கூறுதியால்
தெரிவையவட் கிம்மாற்றஞ் சீர்க்கிளியே கூறுதியால்

அ) இப்பாடலில் இடம்பெறும் உவமைத் தொடரைக் குறிப்பிடுக.

ஆ) புலவர் கூறும் சிறந்த இன்பம் யாது?

(4) இத்தாலிய நாட்டில் வாழ்ந்த ஸ்டொயிக் வாதிகள் உரோமப் பேரரசு காலத்தில் எவ்வாறு ஓர் உலக மனப்பான்மையை வளர்த்தார்களோ அவ்வாறே சங்க காலத்திற்கு முற்பட்ட காலம் தொடங்கி ஓர் உலக மனப்பான்மை தமிழ் நாட்டில் பரவியுள்ளது. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்றும் ''யாதானும் நாடாமல் ஊராமால்'' என்றும் கூறுவதற்கு இம்மனப்பான்மை ஊக்கம் அளித்தது. மேலும் சமணம் புத்தம் போன்ற சமயங்களும் தமிழ் நாட்டில் வரவேற்கப்பட்டதால் இம்மனப்பான்மை விரிவாகியது. பார்ப்பனர் மொழி பெயர் தேயத்தார் யவனர் புலம்பெயர் மக்கள் தமிழ் மக்களோடு இனிதாக வாழ்ந்து வந்தார்கள்.

அ) இவ்வுரைப் பகுதியில் ஆசிரியர் உலக மனப்பாங்கு பற்றி யாது கூறுகிறார்?

ஆ) ஸ்டொயிக் வாதிகளின் கருத்து தமிழ்நாட்டில் எவ்வாறு வெளிப்பட்டது என்பதை ஆசிரியர் குறிப்பிடுகிறார்?

(5) என் அருமைச் செல்வங்களே புறப்பட வேண்டியதுதான். பறம்பு மலையின் இனிய சுனைநீரில் ஒரு முடக்கு குடியுங்கள் கடைசியாக முடிந்த மட்டுக்கும் இந்த மலைப்பூக்களின் மணத்தை இழுத்து மூச்சடக்கிக் கொள்ளுங்கள். கடந்து செல்கையிலே காற்று வீசும். ஆனால் இந்த மலைப்பூக்களின் மணம் பறவைகளின் ஒலி ஓயாது பாரி இருந்தால் பேச்சுக் கொடுப்பார்.... புறப்படுகிறோம் பறம்பே....... மதுவிலும் புலாலிலும் களித்திருந்த நட்பு நம்முடையது.

அ) இக்கூற்று எத்தகைய மனநிலையில் கபிலரால் கூறப்பட்டது?

ஆ) பாரியிடம் கபிலருக்குள்ள ஈடுபாடு எவ்வாறு புலனாகிறது?

($5 \times 4 = 20$ புள்ளிகள்)

03) கிருட்டிணன் தூதுச் சருக்கத்தில்

அ) வீமனின் ஆவேசமும் போரின் மீது கொண்ட ஈடுபாடும்

ஆ) அத்தினாபுரத்தின் இயற்கை வளச் சிறப்பு

என்பன வெளிப்படுத்தப்பட்டுள்ளவாற்றை விளக்குக.

**அல்லது**

குகப்படலத்தில்

அ) பரதனின் சிறப்புக்கள்

ஆ) கோசலை கூறிய வாழ்த்துரை

என்பவற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

04) இலட்சியமும் சமநோக்கும் என்ற கட்டுரையின் அடிப்படையில்

அ) தர்மபுத்திரர்

ஆ) மாணிக்கவாசகர்

ஆகியோர் தத்தமது இலட்சியங்களை எவ்வாறு பேணி நடந்து கொண்டார்கள் என்பதை விளக்குக.

**அல்லது**

தமிழ்ப் பண்பாடு என்னும் கட்டுரையில்

அ) பக்தி பிறநாட்டிற்கு பரவி செழித்தமை

ஆ) உலக மனப்பான்மைக் கருத்துக்களை எடுத்துக்கூற ஆசிரியர் கையாண்ட வழிமுறைகள்

என்பவற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

- **5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

05) நீதிப் பாடல்களில்

அ) மூதுரை கூறும் அடக்கம்

ஆ) நாலடியார் கூறும் நட்பு

. என்பவற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

06) சங்கப் பாடல்களில்

அ) குறுந்தொகையில் தலைவன் வராத விடத்து தலைவி அடைந்த இன்பம்

ஆ) புறநானூற்றில் இளமையின் இனிமை முதுமையின் கொடுமை

என்பன புலப்படுமாற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

07) மூத்தம்மா என்ற சிறுகதையில்

அ) மூத்தம்மா பற்றிய காசிமின் விபரிப்பு

ஆ) மூத்தம்மா என்ற பாத்திர உருவாக்கம்

என்பன அமைந்திருக்கும் விதத்தை விளக்குக.

(10 புள்ளிகள்)